# கடுமையான பாதுகாப்புடன் பார்லிமெண்ட் கூட்டம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 40

மலர் 9 இதழ் 40

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 8 ஜுல்ஹஜ் 10 புதன்கிழமை [22-3-67]

கொழும்பு, செவ்.

பாராளு மன்றக் கூட்டம் இன்று கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் நடைபெற்றது. பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பொலிஸ்பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டிருந்தன.

பாராளுமன்றத்தின் பொதுமக்கள் 'கலரி'யில் எவரும் காணப்படவில்லை. பாராளுமன்றத்துக்கு வெளியே நான்கு பெண் பொலிஸாரும் காணப்பட்டனர்

நேற்றுப்பிற்பகல் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களுக்கிடையே ஏற்பட்டவாய்த்தர்கத்தைத் தொடர்ந்து சபையில் அமளிதுமளி ஏற்பட்டதும் இதன் எதிரொலியாக இரண்டு அங்கத்தவர்கள் சபைக் கூட்டத்திலிருந்தும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

## திருப்பணி

இமையாணன், செவ்.

இமையாணன் வல்லை வழிப் பிள்ளையார் கோவில் புனருத்தாரணம் செய்யப்படவிருக்கிறது. கோவிலின் பழைய சுவரை இப்பகுதி இளைஞர்களும் பொது மக்களும் சிரமதானம் மூலம் இடித்து அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

# தி. மு. க. தூதுகோஷ்டி விரைவில் இலங்கை வரும்

## தப்பெண்ணங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்க வற்புறுத்து

சென்னை, மார்ச் 21

திராவிட முன்னேற்ற கழக அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டி விரைவில் இலங்கை செல்லவிருக்கிறது. இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை சம்பந்தப்படுத்தி எதிர்க் கட்சியினர் செய்து வரும் "வகுப்புவாத பிரசாரத்திற்கு" முற்றுப் புள்ளி வைக்கவே இத்தூது கோஷ்டி இலங்கை செல்லவிருப்பதாக அறியப்படுகிறது.

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உட்பட சில அரசியல் வாதிகளால், இலங்கை மக்கள் மனதில் புகுத்தப்படும் தவறான எண்ணங்களை நீக்குவதற்காக தமிழ்நாடு அரசாங்கம் இலங்கைக்கு நல்லெண்ண தூது கோஷ்டியொன்றை அனுப்ப வேண்டுமென்று தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தில் பேசிய தி. மு. க. அங்கத்தவர் திரு. எம். வி. பி. ஆசைத்தம்பி கேட்டுக் கொண்டார்.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது பேசும் போதே திரு. ஆசைத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ்நாட்டில் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் வெற்றி, இலங்கைக்கு ஆபாத்தாகுமென்று இலங்கையில் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார். இப்படியான தவறான பிரசாரங்களை முறியடிப்பதற்கு ஒரு தூது கோஷ்டி அனுப்பப்படவேண்டும் என்று அவர் கோரினார்.

இத்தூது கோஷ்டி இலங்கை அரசாங்கத்துடன் இந்திய வம்சாவழியினரின் எதிர்காலம் பற்றியும் பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர்.

ஆலயப் பிரவேசம்

## பொலிஸ் சுப்பிரிண்டனுடன் அரசாங்கஅதிபர் ஆலோசனை

### இன்று நடக்கவிருந்த மகாநாடு பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

இன்று ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக கோவில் தர்மகர்த்தாக்கள், அர்ச்சகர்களுடன் அரசாங்க அதிபர் நடாத்தவிருந்த மகாநாடு இம்மாதம் 28-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று அரசாங்க அதிபர் வடமகாண பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடன் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஆலோசனை நடத்தினர். யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா, காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை ஆகியோர் இந்த ஆலோசனையின்போது கலந்துகொண்டனர். ஆலயப் பிரவேசத்துக்கு பொலிஸ் பகுதி எந்த விதத்தில் உதவி செய்யும் என்பது பற்றி அரசாங்க அதிபர் ஆலோசனை கேட்டார்.

ஆலயக் கதவுகள் மூடப்பட்டால், அதனை உடன் திறப்பித்துவிடுவதற்கு பொலிசுக்கு அதிகாரமில்லை என்றும், அது சம்பந்தமாக யாராவது புகார் செய்தால் அதற்கு சாட்சியங்கள் இருந்து சட்டமும் இடம் கொடுக்குமானல், தாம் வழக்குத் தொடருவோம் என்றும் பொலிஸ் சுப்பிரிண்டன் தெரிவித்தார்.

இம்மாதம் 28-ம் திகதி அரசாங்க அதிபர் கூட்டும் மகாநாட்டில், கோயில் தர்மகர்த்தாக்கள், அர்ச்சகர்கள் வடபகுதி எம்.பிக்கள், செனட்டர்கள் கலந்து கொள்வார்கள். [ந. நி]

## குத்தகைக்கு விவசாயக் காணி

செம்பாட்டு விளைச்சல் நிலம் 204 லாச்சம், பயிரிடுவதற்கு ஆயத்தமாக உழப்பட்டுள்ளது, நல்ல கிணறுகள் இரண்டினல் நீர்ப்பாசனம், சுற்றிவர முள்ளுக்கம்பி வேலி. தொடர்பு கொள்ளவேண்டியது—[மேற்படி காணியிலுள்ள] வீரசிங்கே, இல.6, தொட்டிலடி, கிரிமலை றேட், சங்கானை அல்லது ஏ. ஆர். ஜோசெப், 50, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

அதே இடத்தில் விற்பனைக்கும் உடனடியாக எடுத்துச் செல்வதற்குத் தயாராகவும், வெட்டப்பட்ட பனை மரங்கள் 60 உண்டு.

2x2½

## கட்டடம் இடிந்து ஐவர் பலி

சென்னை, மார்ச் 21

சென்னையில் உள்ள ஒரு கிராமத்தில் கட்டடம் இடிந்து விழுந்து 5 தொழிலாளர்கள் மாண்டனர். மழைக்காக ஒரு கட்டடத்தில் ஒதுங்கியபொழுது அது இடிந்து விழுந்தது.

## துங்கு அடுத்தமாதம் வருகிறார்

கொழும்பு, செவ்வாய்

மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் அடுத்த மாதம் 18-ந் திகதி [illegible] கிறார்.

## ஜே. ஆருக்கு 1லட்சரூபாயும் செலவும் வழங்க உத்தரவு

### 'ஜனதின' பத்திரிகை மீதான வழக்கில் தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய்

ஜனதின பத்திரிகை உரிமையாளர்கள்மீது திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடர்ந்திருந்த வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை அவதூறு செய்யும் நோக்கத்துடன் செய்தி பிரசுரித்ததாககவும், ஆனல் தமக்குமான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் பொதுக்கள் தப்பபிப்பிராயம் கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாசவும் இந்த வழக்கில் ஜனதின உரிமையாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு திரு என் ஏ டி. எஸ். விஜயசேகர முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

திரு. ஜயவர்த்தனவுக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடும், செலவு தொகையும் வழங்கும்படி நீதவான் தீர்ப்பளித்தார்.

## அரசியல் உரிமை

### செனட் நிராகரித்தது

கொழும்பு. செவ்.

செனட் சபையில் இன்று அரசியல் அமைப்புச்சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா நிறைவேறியது.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருந்த பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

## சிறிமா மீது தவறு இல்லை

கொழும்பு, செவ்.

திருமதி பண்டாரநாயகாவுக்கு 'மொரிஸ் ஒக்ஸ்போர்ட்' கார் வழங்கப்பட்டது சம்பந்தமாக விசாரணைசெய்த தெரிவுக்கமிட்டி அவர் மீது தவறு இல்லையென்று முடிவுசெய்திருக்கின்றது.

இந்த விசாரணைசம்பந்தமான தஸ்தாவேஜுகள் பிரதிநிதிகள்சபையில்சமர்ப்பிக்கப்பட்டன.

இப்பொழுது திரையிடப்படுகிறது

## ராணி சினிமா

[யாழ்ப்பாணம்]

22, 23, 24, 25, 26 ஆகிய திகதிகளில்

10-30, 2-30, 6-30, 9-30 நான்கு காட்சிகள்

- தமிழ்த் திரையுலகம் இதுவரை காணுத பிரமாண்டமான காட்சி சோடனைகள்.
- கண்ணைக்கவரும் வர்ணப் படப்பிடிப்பு.
- நடிகர் திலகத்தின் உணர்ச்சியூட்டும் நடிப்பு.

சிவாஜி, ஜெமினி, முத்துராமன் நாகேஷ், சாவித்திரி, ஜெயலலிதா, கே. ஆர். விஜயா, கே. பி. சுந்தராம்பாள்

நடித்த

# கந்தன் கருணை

[ஈஸ்ட்மன் கலர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

முட்டைகள்!

வெள்ளை முட்டை -/18 சதம். சிகப்பு முட்டை -/20 சதம். வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு. அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1632

புத்தகம்

இங்கிலிஷ் பாஷையை மூன்றே மாதத்தில் கற்றுக்கொள்ள தமிழில் வகுக்கப்பட்ட நூல். Re.1/- Gnanaraj, P. O. Box: 357, Colombo. 1618

கைத்தறி ஆடைகள்!

பரந்தன், கிளிநொச்சி, கண்டாவளை, இராமநாதபுரம், தர்மபுரம் மக்கள் முரசுமோட்டையில் 107/1, நாராயணசாமி அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இதே ஆடைகள் முரசுமோட்டை சங்கக்கடையிலும், யாழ்ப்பாணத்தில் ஆறுமுகம் டெக்ஸ் டைல்ஸ், 20, பெரியகடை என்ற விலாசத்திலும் கிடைக்கும். 1648

## சனசமூகநிலையத்தின் சமயத்தொண்டு

சாவகச்சேரி, செவ்.

கைதடி-நாவற்குழி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் இவ்வருட முதல் சைவசமய விசேட நாட்களைக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமயகுரவர் பூஜைகளும், நவராத்திரி விழா ஆகியவைகளும் கொண்டாடப்படவிருக்கின்றன.

## சமாசத் தலைவர்

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதிப் பயிர்ச் செய்கைக்குழு சமாசத்தின்தலைவராக திரு. அ. கனகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் காரைநகர்மேற்குப்பயிர்ச் செய்கைக் குழுவின்தலைவராகக் கடமையாற்றிவருகிறார்.

# 'உண்மைகளை அறிய கேள்விகள் கேட்கவேண்டும்'

## மட்டுவில் கொலைவழக்கில் சாட்சியிடம் நீதிபதி

சாவகச்சேரி, செவ்.

''காலஞ்சென்ற சின்னத்தம்பி சம்பவ தினத்தன்று மாலை வீட்டுக்கு வந்து எனது தாயாரிடம் மண்ணெண்ணை வாங்கிச் சென்றார். எதிரிகளுடன் இவர் சண்டை செய்திருந்ததால் இவர் சென்றுகொண்டிருந்ததை நான் முற்றத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். சிறிதுநேரத்தில் எதிரிகளான தம்பன், சின்னப்பன் வீட்டடியில் முதலாவது எதிரி தம்பனின் 'எடேய்' என்ற சப்தம்கேட்டது. அதைத் தொடர்ந்து இறந்த சின்னத்தம்பி 'ஐயோ ஆச்சி' எனக் கத்திய சப்தம் கேட்டது. எதிரிகள் தமது வீட்டு வேலியைப் பிரித்து ஓடுவதை நான் அவதானித்தேன்.'

இவ்வாறு மட்டுவில் கொலைவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த கந்தையா கனகமணி என்னும் 16 வயது மாணவி கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி 18-ம் திகதிமட்டுவில் எனுமிடத்தில் தந்தையும் மகனுமான சுப்பன் தம்பி, தம்பு சின்னப்புஆகிய இருவரும் நாகன் சின்னத்தம்புஎன்பவரைக்கூரிய ஆயுதத்தினல் குத்திக் கொலைசெய்ததாக சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி.எஸ். சண்முகநாதன், புரக்டர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி.எல். விஜயதிலகா வழக்கைநடத்தினர்.

சாட்சி கனகமணி எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சில கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் வழக்கறிஞர் கேள்வியொன்றைக் கேட்டபோது, தேவையானவற்றைக் கூறிவிட்டேன். மேலும் தேவையற்றகேள்விகளைக் கேட்கச் சட்டமில்லை என்ருர். 'இவ்விதம்கோர்ட்டில் கூறினல் கோர்ட்டை அவமதித்ததாக வழக்குத் தொடரமுடியும்' என முதலியார் சாட்சியை எச்சரித்தார்.

உண்மைகளை அறிய கேள்விகள் கேட்கத்தான் வேண்டும். பதிலும் சொல்லித்தானகவேண்டும்என மாஜிஸ்திரேட் இக் கட்டத்தில் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாணம்சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார். மேல்விசாரணை இம்மாதம் 25ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### புதன் 22 - 3-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 தக்பீர், 8-30 விசேஷ ஹஜ் நிகழ்ச்சி

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் நிகழ்ச்சி.

இரவு 6-15 வாய்ப்பாட்டு—எஸ். பேரம்பலம், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 வாய்ப்பாட்டு - நாகபூஷணி தணிகாசலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 பேச்சு டி. எஸ். சேனநாயக்கா, 9-45 வாத்திய இசை, 10-00 நேயர் விருப்பம்.

## மொரார்ஜி பட்ஜட்

புதுடில்லி, மார்ச்21

இந்திய துணைப் பிரதமரும் நிதிமந்திரியுமான திரு. மொரார்ஜி தேசாய் நேற்று லோகசபையில் சமர்ப்பித்த இடைக்கால பட்ஜட்டில், துண்டு விழும் தொகை 350 கோடி ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள 'சிலிண்டர்மெஷீன்மைன்டர்' உடனடியாகத்தேவை. முன் அனுபவத்தைக் குறிப்பிட்டு தராதரப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

2492

ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாண மாநகர சபை
### சோலைவரி முதலாம் கந்தாயம்—1967

1967-ம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம், 1967-ம்ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குமுன்னர் மாநகர சபை அலுவலகத்தில் செலுதபப்பட வேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10வீதம் வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

க/சோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31-3-67ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும் பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

கட்சன் செல்வராசா
மாநகரசபைஆணையாளர்
மாநகரசபைஅலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17-3-67. 2497

### கேள்விப் பத்திர அறிவித்தல்

மன்னார்மாவட்டம் இலுப்பைக்கடவை கிராமசபையில்,

1. தேவன்பிட்டு ரோட்டு.
2. வெள்ளாங்குளம் ரோட்டு.

அமைப்பதற்கான சேவைக்கு ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் 29-3-67 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 28-3-67-ந் திகதி மாலை 4 மணிக்குமுன் எமது கிராம சபையில் மேற்காட்டிய வேலை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ரூபா 50/- கட்டுப்பணமாகவும் ரூபா 10/- விண்ணப்பப்படிவப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின்பெறுமதிரூபா 10-ம் எக்காரணம்பற்றியும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. வேண்டிய விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
வே. கைலாயபிள்ளை
கி. ச. தலைவர்

கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை,
19—3—67. 2498

### அறிவித்தல்

குப்பிழான் மா. திருநாவுக்கரசு என்பவர் எமது கடையில் கூப்பன் கடை நடத்தினர். இப்போது 3 மாசங்களாக, கடையையும் விட்டு ஆளையும் காணவில்லை. தயவுசெய்து அவர் வந்து எமது திறப்பையும், பிணக்கையும் 1-4-67-க்கு முன் தீர்த்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்.

திருமதி க. இராசேஸ்வரி,
குப்பிளான்,
சுன்ஞகம்.
19-3-67.

2493

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
சிவாஜி—பானுமதி
நடித்த
தென்னலிராமன்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
விஜயா—முத்துராமன்
நடித்த
பஞ்சவர்ணக் கிளி

மாதர்களே!
மாதவிடாய் சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும் 2 முதல் 3 மாதங்கள்வரை மாதவிடாய் தடைப்பட்டாலும்கூட நிவாரணம்பெற உடனே
மென்சோஸ்டிரோன்
மாத்திரையை
உட்கொள்ளுங்கள்
இது ஓர் அசல் இங்கிலிஷ் உற்பத்தி
எல்லா வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்
விலை ரூ. 7-50 தபாற்செலவு ச. 50
வி. பி. பி. கவனிக்கப்படும்.
மெட்ரோ ஏஜென்ஸி,
235 1/1, நொரிஸ் ரோட், — கொழும்பு 11:

ஓம்
விராட் விஸ்வப்பிரம்மணே நம
### ருது சோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பராபவ ஞு பங்குனி மீ 9 உ (23-3-67) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் வரும் சுபநேரத்தில் எமது சிரேஷ்டபுத்திரி திருநிறைசெல்வி **இராசவதனி அம்மாளுக்கு** ருதுமங்கள ஸ்நானஞ் செய்ய யாவரையும் அன்புடன் அழைக்கின்ருேம். உறவினர்கள், நண்பர்கள் யாபேரும் இதனை அழைப்பாகக் கொள்ளுமாறு கோருகின்ருேம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
சேனுதிராசா தம்பதிகள்
சேனுதிராசா நகைமாளிகை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

வரவேற்பாளர்கள்
திரு. க. சி. பொன்னுத்துரைப்பத்தர்
திரு. சு. க. சேனுதிராசாப்பத்தர்
திருமதி நாகேஸ்வரி சேனுதிராசா

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Daily at 4-45, 7-00, 9-45
Secret agent 008
OPERATION EXTERMINATION
[Technicolor]

REGAL - JAFFNA
NOW SHOWING
THE HELLIANS

3வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி கொழும்பு
பிளாஸா வெள்ளவத்தை
நவா கொம்பனித்தெரு
விஜிதா ஹட்டன்
விஜயா மட்டக்களப்பு
கல்யாணி நாவலப்பிட்டி
இன்று முதல்
வெலிங்டன்
யாழ்ப்பாணம்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தாயின் மடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னுமில் யுத்தத்தை தீவிரப்படுத்த குவாம் மகாநாடு தீர்மானம்

## சமாதானப் பேச்சுக்களுக்கும் தொடர்ந்து முயற்சி

குவாம்தீவு, மார்ச் 21

**வியட்னுமில் யுத்தத்தைத் தீவிரமாக நடத்துவதென்று குவாம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அதே நேரத்தில் சமாதான முயற்சிகளைக் கைவிடுவதில்லையென்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தொடர்ந்து பாடுபடுவதென்றும் இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பசிபிக்தீவுகளில் ஒன்றான குவாமில் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற வியட்னும் பேச்சுக்கள் நேற்று முடிவடைந்தன. தென் வியட்னுமிய தலைவர்களுக்கும் அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸனுக்குமிடையே நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில்கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

**தீவிரமடையும்**

வியட்னுமில் நடைபெற்றுவரும் யுத்தம், அமெரிக்காவுக்கும் தென் வியட்னுமுக்கும் சாதகமாக அமைந்திருக்கிறதென்றும் வடக்கு வியட்னும் தனது இராணுவ நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளும்வரை யுத்தத்தைத் தீவிரமாக நடத்துவதென்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வியட்னுமில் நெருக்கடியைத் தணிக்க, யுத்தம் தீவிரப்படுத் தப்படவேண்டுமென்று குவாம் மகாநாட்டில் அமெரிக்க அதிபரை தென் வியட்னும் பிரதமர் கேட்டிருந்தார்,

தென் வியட்னும் பிரதமர் ஏர் மார்ஷல் காவே கீ நேற்று இங்கு பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், வியட்னுமில் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டபோதிலும் சமாதான முயற்சிகள் கைவிடப்படமாட்டாது என்றும் வடக்கு வியட்னுமுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு தமது நாடு தயாராகவிருக்கிறதென்றும் இப்பேச்சுக்களில் வியட்காங்கியர் கலந்துகொள்வதைத் தாம் எதிர்க்கவில்லை என்றும் கூறினுர்.

**கொஸிஜின் எச்சரிக்கை**

குவாம் மகாநாட்டுத் தீர்மானம் குறித்து ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின் எச்சரிக்கைசெய்துள்ளார்.

வியட்னுமில் அமெரிக்கா தனது யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதன்மூலம் பலவிளைவுகளை எதிர்நோக்கநேரிடும் என்றும் அமெரிக்காவுக்குச் சாதகமான நிலைமை எதுவும் இதன் மூலம் உருவாகாது என்றும் தெரிவித்துள்ளார்.



**ஹனேய் அறிவிப்பு**

'ஆக்கிரமிப்புக் கொள்கைகளை அமெரிக்கா கைவிடாதவரை சமாதானப் பேச்சுக்களுக்கு இடமில்லை' என்று வடக்கு வியட்னும் அதிபர் ஹோ-சி-மின் அறிவித்துள்ளார்.

### 180-வது வயதில் காலமானவர்: கடைசி மகனின் வயது: 71

கம்பாலா, மார்ச் 21

ஒரு ஆபிரிக்கர் தமது 180-வது வயதில் காலமானதாகச் செய்தி கிடைத்துள்ளது. உகண்டா நாட்டின் வடமேற்குப் பகுதியான அறுவா எனுமிடத்தில் வசிக்கும் ஆபிரிக்கரான ஏஸெகிலி அறென்ஸி தமது 180-வது வயதில் காலமானுர்,

நூறு வருடங்களுக்கு முன்னர் முதலாவது வெள்ளையர் தமது நாட்டுக்கு வந்ததை கடைசிவரை அவர் ஞாபகத்தில் வைத்திருந்ததாகவும் அதிக ஞாபகசக்தி கொண்டிருந்தார் என்றும் கூறப்பட்டது. 1965-ல் இவர் புகைப்பதையும் 'பியர்' அருந்துவதையும் நிறுத்திக் கொண்டார்.

அறென்ஸிக்கு ஐந்து மனைவிகள் உண்டு. கடைசியாக [5-வது] இவர் 80 வருடங்களுக்கு முன்னர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்தார். எல்லா மனைவிமாரும் பத்துக் குழந்தைகளும் இறந்து போனுர்கள், இவரது கடைசி மகனுக்கு வயது 71.

## புதுச்சேரியில் யார்முதன் மந்திரி?

### ராஷ்டிரபதி ஆலோசனையை லெப்.கவர்னர் நாடியுள்ளார்

புதுடில்லி,மார்ச்21

**புதுச்சேரியிலும் ஹரியானுவிலும் காங்கிரஸ் அல்லாத மந்திரிசபைகள் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.**

புதுச்சேரி சட்டசபையில் மந்திரிகள் இருவரும்,ஐந்து சட்டசபை உறுப்பினர்களும்காங்கிரஸிலிருந்துவெளியேறியதைத் தொடர்ந்து முதன் மந்திரி திரு.வெங்கடசுபரெட்டியார்நேற்று தமது மந்திரிசபையின் ராஜிஞமாவைப் புதுச்சேரி லெப்டினன்ட் கவர்னரிடம் சமர்ப்பித்திருந்தார்.

புதுச்சேரி ஒரு யூனியன் பிரதேசமாகும். இங்குள்ள சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள்—30.

காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்கள் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளனர். எதிர்க்கட்சியினர் 15 ஸ்தானங்களைக் கொண்டுள்ளனர். அரசாங்கம் அமைப்பதற்கு அழைப்பு விடுக்குமாறுஇவர்கள் லெப்டினன்ட் கவர்னரைக் கோரியுள்ளனர்.

இக்கட்டத்தில் புதுச்சேரியில் முதன்மந்திரியாக யாரை நியமிக்கலாமென்று லெப்டினன்ட் கவர்னர் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம்ஆலோசனை கேட்டுள்ளார்.

காங்கிரஸும், ஜனநாயக ஐக்கிய முன்னணியும் தலா பதினைந்து ஸ்தானங்களைக் கொண்டுள்ளன.

## பிரான்ஸுடன்தொடர்பைநீடிக்க சோமாலியர் முடிவு

### எதிர்ப்பு நடவடிக்கைகளில் 11 பேர் மாண்டனர்

ஜிபுட்டி, மார்ச் 21

**சோமாலிலாண்டில் நடைபெற்ற தேசிய அபிப்பிராயக் கணிப்பு முடிவுகளைத் தொடர்ந்து இங்கு நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்கள், கைகலப்புகள் காரணமாகப் பதினெரு பேர் பலியானுர்கள்.**

சோமாலிலாண்ட், பிரான்ஸுடன் தொடர்ந்து உறவுகளை வைத்திருப்பதா அல்லது பிரான்ஸுடனுன உறவுகளைத் துண்டித்து விடுதலை பெறுவதா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும் பொருட்டு இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு வாக்குக் கணிப்பு நடைபெற்றது. பிரான்ஸுடன் தொடர்ந்து உறவுகள் வைத்திருப்பதை ஆதரித்துப் பெரும்பான்மையான மக்கள் வாக்களித்திருந்தனர். இம்முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சோமாலிலாண்ட் தலைநகரான ஜிபுட்டியிலுள்ள சிறுபான்மையரான சோமாலிய மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். கைகலப்புகள் மூண்டன. இதன் எதிரொலியாக 11 பேர் மாண்டனர். 25 பேர் காயமடைந்தனர். கலகங்களைத் தொடர்ந்து பிரெஞ்சு பாரசூட் துருப்புகள் இங்கு வரவழைக்கப்பட்டன. ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டது. பலர் கைதுசெய்யப்பட்டனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் அமைதி நிலவுவதாகக் கடைசியாக வெளியான செய்திகள் தெரிவித்தன.

### ராமசாமி நாடார் தெரிவு

சென்னை, மார்ச் 20

ராஜ்யசபையில் தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை வகித்துவந்த உறுப்பினர் பதவி காலியாகிவிட்டதால் அந்த இடத்துக்கு சுயேச்சையாளரான திரு. மு. வி. பி.இரமசாமி நாடார் தி. மு. க. ஆதரவுடன் தெரிவுசெய்யப்பட்டிருக் கின்றுர்.

### பாலக்காடு வழியாக...

திருவனந்தபுரம், மார்ச் 21

பாலக்காடு வழியாக தமிழ் நாடுக்கும் கேரளத்துக்கும் சாலைப்போக்கு வரத்து [illegible] அமைப்பதில் கேரள அரசாங்கம் [illegible] க்கப்பட்டது.

### தமிழ்நாடு கவர்னர்உரைமீது விவாதம்

சென்னை, மார்ச் 21

தமிழ்நாடு கவர்னரின் உரை மீதான விவாதம் இன்று மாநில கீழ்சட்டசபையில் 2-வது தடவையாக நடைபெற்றபொழுது சுமார் 20 அங்கத்தவர்கள் பேசினுர்கள்

சுதந்திரக்கட்சி அங்கத்தவர் ஒருவர் பேசுகையில் காங்கிரஸ் ஆட்சியின்போது கலைக்கப்பட்ட எல்லா நகரசபைகளையும் மீண்டும் கூட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். வலதுசாரி கம்யூனிஸ்ட் அங்கத்தவர் ஒருவர் பேசுகையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் சம்பந்தமாக எதுவும் கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லையென்று கவலை தெரிவித்தார்.

காங்கிரஸ் அங்கத்தவர் ஒருவர், தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் காணப்பட்ட வாக்குறுதிகள் பலவும் கவர்னர் உரையில் காணப்படவில்லையென்று கண்டித்தார்.

அரசாங்கத் தரப்பில் திரு. ஆசைத்தம்பி பதிலளிக்கையில் தி. மு. கழகம் அளித்துள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள் நிச்சயமாக நிறைவேற்றி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றுர். தி. மு. க. அங்கத்தவர் திரு. அண்ணுமலை பேசியபோது புதுச்சேரி ராஜ்யத்தை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினுர்.

## ஹரியானுவில் 'சம்யுக்த தள்' உதயம்

### மந்திரி சபை அமைக்க வாய்ப்புக்கிடைக்கலாம்

சண்டிகர், மார்ச் 21

**ஹரியானு முதன் மந்திரி திரு. பகவத்தயாள் சர்மா ராஜினுமா செய்ய வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் கோரியுள்ளனர்.**

ஹரியானு முதன் மந்திரியாக திரு. சர்மா நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து [காங்கிரஸ்] சட்டசபை அங்கத்தவர்கள் பதின்மூன்று பேர் காங்கிரஸிலிருந்து வெளியேறினர். இவர்கள் பின்னர் எதிர்க்கட்சிகளுடன் கூட்டாகச் சேர்ந்து "சம்யுக்த" தள் அமைத்துள்ளனர்.

அரசாங்கம் அமைக்க தங்களால் முடியுமென்றும் முதன் மந்திரி உடனடியாக ராஜினுமா செய்ய வேண்டுமென்றும் இவர்கள் கவர்னரைக் கோரியுள்ளனர்.

ஹரியானு சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள்: 81. இதில் காங்கிரஸ் 48 இடங்களைக் கைப்பற்றியிருந்தது. எதிர்ப்புத் தெரிவித்து 13 பேர் காங்கிரஸிலிருந்து விலகியதைத் தொடர்ந்து காங்கிரஸின் பலம் 35 ஆகக் குறைந்தது எதிர்க்கட்சியினர் அமைத்துள்ள சம்யுக்த தளத்தில் மொத்தம் 43 பேர் உள்ளனர். ஹரியானு சட்ட சபையில் அறுதிப் பெரும் பான்மை பலத்தை சம்யுக்த தள் இப்பொழுது கொண்டிருப்பதால் மந்திரி சபை அமைக்கும் வாய்ப்பு இதற்கே கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எல்லா அதிகாரங்களும் அரசாங்கத்தினிடம் குவிந்திருப்பதை நான் விரும்பமாட்டேன். தர்மகர்த்தாக் கொள்கை விஸ்தரிக்கப்படுவதையே விரும்புகிறேன். ஏனெனில், அரசாங்கத்தின் பலாத்காரத்தை விட, தனிநபர் உடைமையிலுள்ள பலாத்காரத்தின் தீமை குறைவானது என்பது என் கருத்து.

——மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஸ்ரீ பங்குனி மீ 8 உ (22-3-67)

## பிரதிநிதிகள் வழிகாட்டவேண்டும்

தெவிநுவரை உபதேர்தல் சமயத்தில் அங்கு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றது பற்றி ஜனப்பிரதிநிதிகள் சபையில் கண்டனம் தெரிவிக்க முயன்ற சில அங்கத்தவர்கள், சபை ஒழுங்குகளை மீறியும் சபாநாயகரின் வார்த்தையை மீறியும் நடந்துகொண்டிருப்பது பெருமை தரக்கூடிய விஷயமல்ல.

தெவிநுவரை உபதேர்தல் சமயத்தில் அங்கு வன்முறைச் செயல்கள் நிகழ்ந்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எந்தக் கட்சியானாலும், எவரானாலும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கவேண்டிய விஷயம். ஜனநாயக வாழ்க்கை முறையில் மிகச் சக்திவாய்ந்த ஆயுதம், மக்களின் வாக்குரிமைதான். வாக்குரிமையை மக்கள், பிறர் தலையீடு இன்றியும் பயமுறுத்தல் இன்றியும் சுதந்திரமாக உபயோகிக்கவேண்டும். இந்தியத் தேர்தல்சமயத்திலும், அதன் பின்னரும் ராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் இந்திய ராஜ்யங்கள் பலவற்றிலும் நிகழ்ந்த வன்முறைச் செயல்கள் பற்றியும், தெவிநுவரையில் நடந்த பலாத்காரச் சம்பவங்கள் பற்றியும் சில தினங்களுக்கு முன் இதே பத்தியில் குறிப்பிட்டு, அச்செயல்களைக் கண்டித்திருந்தோம்.

ஆனால் தெவிநுவரை வன்முறைச் செயல்கள் பற்றி, ஜனப்பிரதிநிதிகள்சபையில், மக்கள் பிரதிநிதிகள் சிலர் கண்டனம் தெரிவிப்பதில் நடந்துகொண்ட முறை, பார்லிமெண்டரி ஜனநாயகத்துக்குப் பெருமை தரக்கூடியதல்ல. கண்டனம் தெரிவிப்பதிலும், வன்முறைச் செயல்கள் பற்றி விசாரணைசெய்ய வேண்டுமெனக் கோருவதிலும் ஒழுங்குமுறைகள் மீறப்படுவது நல்லதல்ல. அமைதியையும், ஒழுங்கையும் கடைப்பிடிக்கவேண்டும் என்று மக்களைக் கேட்டுக்கொள்ளும் மக்கள் பிரதிநிதிகளும், தலைவர்களும், தாங்கள் ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடு, நிதானம், பொறுமை ஆகியவைகளைக் கடைப்பிடித்து மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். மக்களுக்கு அவர்கள் வழிகாட்ட வேண்டும்.

# சமத்துவம் பூரணத்துவம் பெறும் ஹஜ்ஜு வணக்கம்

— செல்வி தமீமா அப்துற் றஸ்ஸாக் —

பெருநாட்களும் திருநாட்களும் இறைவனின் தத்துவத்தையே நமக்கு உணர்த்துகின்றன. ஒரு உண்மையான முஸ்லிம், இறைவனுடைய கட்டளைக்காக எவ்வாறு தன்னைத் தியாகபுருஷனாக ஆக்கிவிடுகிறானென்றால் அது உண்மையிலே வியப்புக்கும் உணர்வுக்குமுரியதாகும். ஒரு முஸ்லிம் திரு, மக்காவுக்குப் போவதற்கான தகுதி பெற்றுவிட்டால் அவன் தன்னுடைய மனைவி, மக்கள், சுற்றம், தொழில் அத்தனையும் விட்டு, அங்கு செல்கின்றான். அவன் மக்காவிலுள்ள ''கஃபதுல்லா'' எனும் பள்ளிவாசலுக்குப் போக முன்னரே, அதாவது மக்கா நகர் செல்ல முன்பே அரையில் ஒரு வெண்ணிற ஆடை, தேகத்தை மூடிக் கொள்ள ஒரு வெள்ளைப் பிடவை. இவற்றைத் தவிர வேறொன்றும் அணிதல் கூடாது. இப்படியே லட்சக்கணக்கான முஸ்லிம்கள் காட்சியளிப்பர். அரசர்கள், பிரபுக்கள், வறியவர்கள் யாவரும் ஒரே இறைவனின் அடியவர்கள் எனுந்தத்துவத்திலே காட்சியளிப்பர். இங்கே சமத்துவம் பரிபூரணத்துவம் பெறுவதை. ஹஜ்ஜு வணக்கத்திலே அங்கு நேரடிக் காட்சியாக நாம் காண முடிகின்றது.

கடும் பாலைவனத்திலே சுடும் மணலிலே, பாதரட்சையின்றி இறைவனைத்தியானிக்கும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகவே அமையும். இது இறைவனின் ஆணைக்குத் தலைவணங்குதலையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. கடமையைச் செவ்வனே புரிவோர்க்கு இறைவன் இவ்வுலகிலேயே 'அல்ஹாஜ்' என்ற ஒருபெருமையான பட்டத்தையுஞ் சூட்டிவிடுகின்றான். அதன் காரணமாகத்தான் நாமும் ஹஜ்ஜுக்குப் போனவர்களை 'அல்ஹாஜ்' என்றும் 'ஹாஜியார்' என்றும் முறையே எழுதியும் அழைத்தும் வருகின்றோம். மக்காவிலுள்ள இறைவனின் புராதன ஆலயமான பள்ளிவாசலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுது பின்னர் அவ்விடத்தில் முன்னைய தீர்க்கதரிசிகளில் ஒருவரான 'இப்றாஹீம்' நபி [அலை] அவர்களின் தியாகத்தையும் ஞாபகப்படுத்திச் செயல் பெறுவதன் பயனே ஹஜ்ஜுப் பெருநாளாகும்.

இப்றாஹீம் நபி [அலை] அவர்கள் ஓரிரவு தனது அருமை மைந்தன் இஸ்மாயிலை [அலை] பலியிடும்படி இறைவன் கட்டளையிட்டதாகக் கனவு கண்டார். துடி துடித்து எழுந்தார் மகனை அழைத்துக்கொண்டு மக்காவிலிருந்து 3 மைல் தூரமான மிறு என்னுமிடத்தையடைந்தார். தந்தையான இப்றாம் [அலை] அவர்கள் மகனைத் தரையிலே முகங் குப்புறக் கிடத்தித் தமது கால்களால் அமர்த்திக்கொண்டு கூரிய கத்தியைக் கையில் எடுத்து 'அல்லாஹு அக்பர்' [அல்லாஹ் மிகப் பெரியவன்] என்ற தக்பீரை முழக்கஞ்செய்து அறுக்க எத்தனித்தார்கள். அப்போது இறைவன் தன்னுடைய மேலான வானவரை [ஜீப்ரீல்] [அலை] அனுப்பி அறுக்கவிடாது தடுத்து இறைவனின் அளவிலாத ஆசியையுங்கூறினார். இதைக் கேட்டதும் தந்தையும் மைந்தரும் பெரு மகிழ்ச்சியெய்தினர். இப்படியான ஒரு பெரிய தியாகத்தைச்செய்த இருவரின் உறுதியையும் அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையும் வெளிப்படுத்துவதே இந்த ஹஜ்ஜுப்பெருநாளின் தத்துவமாக அமைகின்றது.

கடந்து போன இறைவனின் அருட்கொடைகளை அடைதற்குமுயல்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் [அல்லாஹ்] எமக்கருள் புரிவான், ஆமீன்.

''யாறப்பல் ஆலமீன்''

# மொழியைச் சாப்பிடலாமா?

1958-ம் ஆண்டு. இலங்கை முழுவதும் இனக்கலவரத்தில் மூழ்கி சகோதரரைச் சகோதரர் தாக்கி அடித்து, கொளுத்தி எரித்து வந்த காலம். கொழும்பில் நான் வசித்த வீட்டுக்கெதிரே ஒரு சிங்களவர் விறகுக்காலை வைத்திருந்தார். அவர் என்னோடு மிகவும் அன்னியோன்யமாகப் பழகி வந்தவர். வகுப்புவாத விஷம் பரவியதும் எதிர்பாராதவிதமாக அவரும் மாறிவிட்டார்.

சிங்களவரும் தமிழரும் மற்றச் சமூகத்தவர்களும் ஒத்துழைத்து எல்லோரும் இலங்கையின் நன்மைக்காக ஒத்துழைத்தால்தான் நாங்கள் உணவுப் பிரச்னையில் தன்னிறைவு காணலாமென்றும், இலங்கையரை முதலில் எதிர்நோக்கும் பெரும் பிரச்னை உணவுப் பிரச்னையே என்றும் நான் வாதாடும்போது, அவர் திருப்பி சொல்லுவார், 'எங்களுக்கு சோறும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். எங்களுக்கு வேண்டியது பாஷையே!'

இக்கருத்து அக்காலத்தில் பொதுவாக சிங்கள மத்திய வகுப்பினரிடையே நிலவிய கருத்து.

ஏன், மந்திரிகளும் இக்கருத்தையே கொண்டிருந்தனர்.

உணவும் வேண்டாம், ஒற்றுமையும் வேண்டாம். சிங்களமும் பௌத்தமும் கிடைத்தால் போதும் என்ற முரட்டுவாதம் அப்பொழுது தலைவிரித்தாடியது.

கனம்தங்கிய நமது காணி மந்திரி திருவாளர் சி. பி. டி. சில்வாவும் அக்காலத்தில் இக்கருத்தையே பேணி வளர்த்து வந்தவர். அப்பொழுது அவர் பண்டாவின் எம். ஈ. பி. அரசாங்கத்தில் மந்திரியாயிருந்தார்.

தமிழரைத் தீர்த்துக்கட்டுவதற்கு அவர் பொலன்னறுவைப் பகுதிகளில் செய்த பிரமாண்டமான பிரயத்தனங்கள் உலகம் அறிந்தது.

மேற்சொன்ன விறகு வெட்டிபோல சி. பி. டி. யும் ஒற்றுமை வேண்டாம், அரிசி வேண்டாம், மொழியே வேண்டும் என்று ஒரு நேரம் களிநடம் புரிந்தவர்.

இன்று ஐயன் அடங்கிவிட்டார்.

இலங்கை மக்களுக்கு சிங்கள மொழி கொடுப்பதற்கு முன் சிங்கள அரிசி கொடுப்பதே எங்கள் பிரதமமந்திரியின் அபிலாஷை என்று சி. பி. டி. சில்வா சிலாபத்தில் கூறியிருக்கிறார்.

எத்தகைய மனமாற்றம் பார்த்தீர்களா, அன்பர்களே!

மக்கள் பசி, பசி என்று கதறுகிறார்கள்.

அவர்களுக்கு 'இதோ, மொழி, பௌத்தம்' என்று கூறினால் எத்தனை நாட்களுக்குக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

மொழியைச் சாப்பிட்டு வயிற்றுப் பசியைத் தீர்க்க முடியுமா? மதத்தை உண்டு வாழ முடியுமா?

வயிற்றை நிரப்ப சோறு வேண்டும். சோறு வேண்டுமானால் இலங்கையிலுள்ள எல்லா சமூகத்தவரும்ஒன்று சேர்ந்து சோற்றை உற்பத்தி செய்வதில் ஒத்துழைக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் முதலாம் நம்பர் மார்க்ஸீஸவாதியும், புரட்சியின் தலைவனும், இன்று தேசிய அரசாங்கத்தில் ஒரு பெரிய தூணாயுமிருக்கும் தோழர் பிலிப் குணவர்த்தன கண்டியில் நடைபெற்ற ஆசிய பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியதும் ஒரு நல்ல சகுனமாக நமக்குப் படுகிறது.

### நாட்டிலும் நகரிலும்

பிலிப்பர் சொன்னது மிகவும் பொருத்தமானது.

''பணம் படைத்துள்ள பெரிய முதலாளித்துவ நாடுகளிடம் நாங்கள் பிச்சை கேட்க விரும்பவில்லை. எமது ரப்பர், தேயிலை, தெங்குப் பொருள் முதலியவற்றிற்கு அவர்கள் கூடுதலான விலை கொடுத்தால் போதும்.''

என்று இந்த மார்க்ஸீய தந்தை கூறியிருப்பது அவருடைய பழங்காலத்துப் புகையும் நெருப்பும் இன்னும் அவரை விட்டு அகலவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மொழியும், சமயமும், வகுப்புவாதமும் எமது வயிற்றை நிரப்பப்போவதில்லை. எல்லாச் சமுதாயங்களும் ஒற்றுமையாக உழைப்பதும், இயற்கை எமக்குக் கொடுத்துள்ள நில வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதுமே எமது பொருளாதாரக் குறைகளை நீக்குவதற்குப் போதுமானது.

-- வழிப்போக்கன்.

## திருக்கேதீஸ்வர அலங்கார விழா

யாழ்ப்பாணம், புதன்

திருக்கேதீஸ்வர ஆலய அலங்கார உற்சவவிழா ஏப்ரல் மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகி 25-ம் திகதி வரை நடைபெறும். இலங்கையிலுள்ள இந்து சமய கல்லூரிகளும், இந்து சபைகளும், தினமும் விழாக்களை சிறப்பாக நடத்த முன்வந்துள்ளன.

ஏப்ரல் 6-ம் திகதி ஆரம்ப பூசை நடைபெறும். 7-ம் திகதி 1-ம் திருவிழாவை திருகோணமலை சைவ அடியார்கள் நடாத்துவார்கள். 8-ம் திகதி மட்டக்களப்பு சைவ அடியார்களும், 9-ம் திகதி மத்தியமாகாண சைவ மகாசபையும், 10-ம் திகதி அட்டன்டிக்கோயா இந்து மகாசபையும், 11-ம் திகதி காரைநகர், யாழ். இந்துக் கல்லூரியும், 12-ம் திகதி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும், 13-ம் திகதி கொழும்பு இந்துக் கல்லூரியும் விழாக்களை நடத்தும்.

14-ம் திகதி பிலவங்க வருடப் பிறப்பு விழா நடைபெறும். 15-ம் திகதி யாழ் மத்திய கல்லூரி, 16-ம் திகதி தெல்லிப்பளை மகாஜன கல்லூரி, 17-ம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி 18-ம் திகதி வண்ணைவைத்தீஸ்வரக் கல்லூரி, 19-ம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, 20-ம் திகதி யாழ். இந்துக் கல்லூரி, 21-ம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, 22-ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி, 23-ம் திகதி மன்னார் சைவ வர்த்தக சங்கம், 24-ம் திகதி திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி, 25-ம் திகதி மன்னார் மாந்தை சைவ அடியார்கள்.

## யோகர் குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

யோகர் சுவாமிகள் குருபூசையும் பாதயாத்திரை வழிபாடும் நாளை காலை 4மணிக்கு சிவதொண்டன் நிலையத்தில் ஆரம்பமாகும். பாதயாத்திரை 6மணிக்கு சிவதொண்டன் நிலையத்தில் ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி கோவிலையடைந்து அங்கிருந்து கொழும்புத்துறை ஆச்சிரமத்தை சென்றடையும்.

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆனந்தா ஆச்சிரமத்தில் யோகர் சுவாமிகளின் குருபூசைத்தினம் கொண்டாடப்படவிருக்கிறது. இதனை முன்னிட்டு விஷேச பூசை ஆராதனைகள் இடம் பெறும். அடியார்களுக்கு அன்னதானமும்வழங்கப்படும்.

# தரமற்ற நூல்கள்சஞ்சிகைகள் அனுப்புவதைத் தடைசெய்க

## தமிழகஅரசாங்கத்துக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''தமிழக அமைச்சரவையில் பல எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அங்கம் வகிப்பதையிட்டு யாழ். இலக்கிய வட்டம் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறது. இதனால் தமிழகத்துக் கலை, இலக்கிய உணர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்படவேண்டுமென்றும் விரும்புகிறது. தமிழகத்திலிருந்து இங்கு இறக்குமதியாகும் பெரும்பான்மையான நூல்களும், பத்திரிகைகளும் தரம் குறைந்தவைகளாகவும், மக்களின் இரசனையைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்வனவாகவும் அமைந்துள்ளன. அதுபற்றி இங்குள்ள இலக்கிய இயக்கங்கள், வாசகர்கள் ஆகியோர், ஏற்கனவே அதிருப்தி தெரிவித்துள்ளனர். இவ்விஷயம் பற்றித் தங்கள் அமைச்சரவை ஏற்ற நடவடிக்கைகளைக் கையாண்டு தரமற்ற நூல்கள். சஞ்சிகைகள் இங்கு இறக்குமதியாவதைத் தடைசெய்யவேண்டுமென யாழ். இலக்கியவட்டம் கேட்டுக் கொள்கின்றது.''

மேற்படி தீர்மானம் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் யாழ். மாநகரசபை ஊழியர் பொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ். இலக்கிய வட்டக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

''இலக்கியஇரசனையை ஏற்படுத்துவது எவ்வாறு'' என்ற தலைப்பில் 29-ந் திகதி கருத்தரங்கொன்றை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நாவலர் லட்சியங்கள் நிறைவேற உழைப்போம்”

யாழ்ப்பாணம், புதன்
‘சைவத்துக்கும் தமிழுக்கும் புத்துயிரூட்டிய நாவலர் பெருமான் ஈழநாட்டில் மாத்திரமல்லாது பாரத நாட்டிலும் போற்றப்பட்டு வருகின்றார்’ என்று காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச் சபைக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், நாவலர் செய்த தொண்டுகளைப் பின்பற்றி எம்மாலியன்ற பணிகளைச் செய்ய முன்வரவேண்டும் என்றும், அவர் இலட்சியங்களைக் கைகூட முன்னின்று உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வைகாசி மாதத்தில் நிகழவிருக்கும் நூற்றாண்டு விழா ஞாபகமாக திரு. மு. கனகரத்தினம்பிள்ளை எழுதிய நாவலர் சரித்திரத்தை வெளியிடுவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது. விழாவுக்கு தமிழக அறிஞர் வித்துவான் ச, தண்டபாணி தேசிகரை அழைக்கவேண்டுமெனவும் முடிவுசெய்யப்பெற்றது.

# பாடசாலைகளுக்கான கலைக்கழக நாடகப்போட்டி

புன்னாலைக்கட்டுவன், செவ்.
இலங்கைக், கலைக்கழகத் தமிழ்நாடகக் குழு இவ்வாண்டும் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டி ஒன்றைநடாத்தவிருக்கிறது. இப்போட்டியில் நாட்டுக்கூத்துமரபைத்தழுவிய நாடகங்களும், தற்கால நாடக முறையிலமையும் நாடகங்களும் இடம்பெறலாம் எனத் தெரியவருகிறது.

தற்கால முறையிலமையும் நாடகங்கள் சுயமாக எழுதப்பட்டனவாக அல்லது மேடைக்கேற்ற முறையில் நாடகமாக அமைக்கப்பட்ட நாவலாகவோ சிறுகதையாகவோ அல்லது பிறமொழி நாடகத்தின் தழுவலாகவோ அன்றி மொழிபெயர்ப்பாகவோ இருக்கலாமெனக் குழுத்தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

## திருக்கேதீச்சரத்தில் பங்குனிஉத்தரவிழா

திருக்கேதீஸ்வரம், செவ்.
திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இம்மாதம் 25-ந் திகதி அன்று பங்குனி உத்தர விழா மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. அன்றுபகல் கௌரி அம்பாள் கேதீச்சரநாதனுக்கு விசேஷ சங்காபிஷேகம் பூசை ஆராதனைகள் மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அன்று இரவு, பஞ்சமுகார்ச்சனையும், திருவுலாக் காட்சியும் நடைபெறும்.

இவ்விழாவை முன்னிட்டு விடத்தல்தீவு, சவுரிகுளம், கோவிற்குளம். இலுப்பைக் கடவை, வெள்ளாங்குளம், வண்டக்கண்டல் ஆகிய இடங்களுக்கு மன்னார் இ. போ. ச. டிப்போ விசேஷ பஸ்சேவைகள் நடாத்தவிருக்கிறது.

## பார்சலுக்குள் தங்கம்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் சில பார்சல்களுக்குள்ளே தங்கமிருப்பதாக சுங்கப்பகுதியினர் நேற்றுக் கண்டுபிடித்திருப்பதாக அறியப்படுகிறது.

ஆறு பார்சல்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. ஒரு பார்சலில் தங்கமிருந்ததாகவும், மற்றப்பார்சல்கள் இன்னும் உடைக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது. இப்பார்சல்கள் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

## தற்கொலை

சங்கானை, செவ்வாய்
வட்டுக்கோட்டை கிழக்கைச்சேர்ந்த முருகேசு கந்தையா [65வயது] என்னும் முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தமது வீட்டில் தமக்குத் தானே பெட்ரோல் ஊற்றித் தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் சங்கானைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். சரவணமுத்து ஸ்தலத்தில் விசாரணை நடத்தியபோது இவர் சிலகாலம் நோய் வாய்ப்பட்டிருந்ததார் எனத் தெரிய வந்தது. வட்டுக்கோட்டை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். குலத்துங்கம் பிரேத பரிசோதனை நடாத்தினர். மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா சாட்சியங்களைப் பதிவு செய்தபின்தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# ஸ்டாலின் மகள் தஞ்சம் கோரவில்லை

## இந்திய லோகசபையில் சக்ளா விளக்கம்

புதுடில்லி, மார்ச் 21
“ஸ்டாலின் மகள் ஸ்வெட்லானா இந்தியாவுக்கு வந்ததும் பின்னர் இந்தியாவிலிருந்து ரோமாபுரிக்குச் சென்றதும் அவரது சொந்த விருப்பத்தில் தான், இதில் இந்திய அரசாங்கம் சிறிதும் தலையிடவில்லை” என்று இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சக்ளா இன்று லோகசபையில் தெரிவித்தார்.

லோகசபை அங்கத்தவர்களின் வற்புறுத்தலின் பேரில் திரு. சக்ளா இந்த விபரத்தை இன்று வெளியிட்டார்.

“இந்தியாவுக்கு வருவது குறித்தோ அல்லது இந்தியாவில் இருப்பது பற்றியோ அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவில்லை, இங்கு அவர் அரசாங்க விருந்தினராகவுமிருக்கவில்லை. அரசாங்கத்திடம் தஞ்சமும் கோரவில்லை. இதன் காரணமாக அவர் விஷயத்தில் இந்திய அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை” என்றும் திரு. சக்ளா கூறினர்.

# ஐந்து சிறுவர்களையும் யாழ்ப்பாணம் கொண்டுவந்தனர்

## முல்லைத்தீவு கண்ணன் மரணம எதிரொலி: பொலிஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்
முல்லைத்தீவு கண்ணன் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்ட சிறுவனை ஜெயக்கொடியும், அதே நேரத்தில் அவனுடனிருந்ததாக சந்தேகிக்கப்படும் புனிதன், ஆனந்தராசா, தேவு, சிவபாதம் ஆகிய ஐவரும் மேலும் வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டனல் விசாரணை செய்யப்படுவதற்காக யாழ்ப்பாணம் கொண்டுரப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் இரகசிய பொலிஸ்சார்ஜண்ட் பொன்னுத்துரை தலைமையில் முல்லைத்தீவுசென்ற பொலிஸ் கோஷ்டி இவர்களை கைது செய்து யாழ்ப்பாணம் கொண்டுவந்தது.

கண்ணன் கொலை செய்யப்பட்ட தினம், ஜெயக்கொடி கற்றப்போவில் வைத்து கல் ஒன்றை அடித்தபோது அது கண்ணன் தலையில் பட்டு காயம் விளைவித்ததென்றும், பின்னர் கண்ணனுக்கும், ஜெயக்கொடிக்கும் இடையில் இது சம்பந்தமாக தகராறு எழுந்ததென்றும், இதனைத் தொடர்ந்து கண்ணனை ஜெயக்கொடி கத்தியால் குத்தினரென்றும், இதனல் கண்ணன் மரணமடைந்தானென்றும், பின்னர் ஜெயக்கொடியின் தமையனை சடாச்சரம் [22 வயது], தகப்பனை துரையப்பா ஆகியோர் சம்பவம் நடந்த தினம் கண்ணனைப் புதைத்தனரென்றும் பொலிசார் துப்புத்துலக்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்ட ஐந்து சிறுவர்களும் நேற்று நான்கு மணி நேரம் விசாரணை செக்யப்பட்டனர்.

[ந. நி.]

## பண்டிதமணிக்கு பிறந்தகத்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு அவரது பிறப்பிடமான தென்மராட்சியில் பாராட்டுவிழா எடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. இவ்விழாவின்போது கந்தபுராண கட்டுரைகள் கொண்ட ‘கந்தபுராண கருவூலம்’ என்ற நூல் வெளியிடப்படும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஏப்ரல் மாதம் 30-ந் திகதி நடைபெறும் இவ்விழாவிற்கு நீதியரசர் ஏச். டபிள்யு. தம்பையாகியூ, சி. தலைமை தாங்குவார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள்.

பேராசிரியர் வைத்திய கலாநிதி திரு, ஏ. சின்னத்தம்பி, பேராசிரியர் திரு. எஸ். மயில்வாகனம், திரு. கே. பி. ஹரன், இராஜ அரியரத்தினம், திரு. எஸ். டி. சிவநாயகம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள். பண்டிதமணி பாடநூல் வெளியீட்டு சபைத் தலைவர் திரு. சி. சுவாமிநாதன் சிறப்புரை வழங்குவார்.

பண்டிதமணி உபசார விழா சபை, இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து வருசிறது.

## தாதிப்பயிற்சி பெற லண்டன் பயணம்

உடுவில், செவ்.
சுதுமலைரோடையைச் சேர்ந்த செல்வி ஞானமலர் கனகசபை தாதிப் பயிற்சி பெறும் பொருட்டு விமானத்தில் லண்டனுக்கு சென்றுள்ளார். இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவியாவார்.

# இன்று

யாழ்ப்பாணம், புதன்
வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணிமுதல் 7-30 வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் திருஞான சம்பந்தர் தொடர்பிரசங்கம் நடைபெறும். இரவு 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெறும்.

ஃ

சுழிபுரம், புதன்
பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமானின் எட்டாம் திருவிழா இன்று நடைபெறும். பகல் விசேஷ அபிஷேக ஆராதனையும், மேளக்கச் சேரியும் இரவு சொற்பொழிவும், நாடகமும் நடைபெறும்.

ஃ

யாழ்ப்பாணம், புதன்
கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய கோவிலில் மகாகும்பாபிஷேகம் முதலாவதாண்டு பூர்த்தி சகஸ்திர சங்காபிஷேக கற்பூரத் திருவிழா இன்று நடைபெறும்.



## புதியவழக்கறிஞர்

யாழ்ப்பாணம், செவ்வாய்
திரு. தி. குணரத்தினம், அண்மையில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு. மாணிக்கவாசகர், திரு. சமரவிக்கிரம ஆகியோர் முன்னிலையில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக விஸ்வாசப்பிரமாணம் செய்துகொண்டார்.

சட்டக்கல்லூரியில் தமிழ் மன்றத்தின் தலைவராகவும், இந்துமகாசபையின் உபதலைவராகவும், ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட இவர், சட்டசஞ்சிகையான நீதிமுரசின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

சமூக சேவையாளரான இவர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் சாரண ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அண்மையில் திரி சாரணத் தலைவர் கேட்முதலியார் திரு. ஏ. எல். தஹநாயக்காவினல் திரி சாரண்யத்தில் உயர்ந்த விருதாகிய ‘பேடன் பவல்’ விருது இவருக்கு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நா. வ. கந்தையாவின் புதல்வராவர்.

## சதி வழக்கு

கொழும்பு, செவ்.
சதிவழக்கின் விசாரணைகள் 28-ந் திகதி முற்றுப்பெறும் என்று கருதப்படுகின்றது. அன்றையதினம் எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் தமது தொகுப்புரைகளை சமர்ப்பிப்பார்கள்.


# விலாச மாற்றம்

தேசிய லொத்தர் சபையின்
புதிய காரியாலயம்
27-3-67 தொடக்கம்

இல. 502/1, காலி றேட், கொள்ளுப்பிட்டி
என்னும் விலாசத்திலிருந்து இயங்கும்.

எரிக் டி சில்வா,
ஜெனரல் மனேஜர்,
தேசிய லொத்தர் சபை.

தொலைபேசி: 7631


3×4
1205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப்பிரவேசம்

# வழக்குகளை எதிர்த்து வாதாட நடவடிக்கை

அளவெட்டி, செவ்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அழைப்பை ஏற்று அவருக்கு எமது நிலையை விளக்குவதற்கு நாட்டிலுள்ள சகல கோவில் தர்மகர்த்தாக்களும், குருக்கள்மார்களும் ஒன்று திரண்டு செல்ல வேண்டுமென்று சைவஅநுட்டானத் தலைவரும்சமாதான நீதிபதியுமான திரு. த. சிவலிங்கம் அகில இலங்கை சைவாலயதர்மகர்த்தாச்கள் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கீரிமலை சிருப்பர்மடத்தில் பிரம்ம ஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திரு. த. சிவலிங்கம் தொடர்ந்து பேசுகையில், தீண்டாமை ஒழிப்பு சைவ அநுட்டான ஒழிப்பு என்பதை ஒவ்வொரு சைவனும் உணர வேண்டுமென்று வலியுறுத்தினர்.

திரு, செ. பொன்னம்பலம் பேசுகையில் சைவசமயத்தைச்சேராதவர்களும், இடதுசாரிகளும் தலைமைவகித்து, சைவசமயத்தையும் சைவக் கோவில்களையும் அழிக்கமுயற்சிக்கின்றனர்என்றும் இதை நாம் எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாகத் தர்மகர்த்தாக்கள், கோவில் குருக்கள்மார்கள் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்டிருக்கும் வழக்குகளுக்கு இச்சபை வேண்டிய வசதிகளைச் செய்வது எனவும் குருக்கள்மார்களை அவசியமில்லாது கண்டிக்கும் பத்திரிகை ஆசிரியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பது என்றும் மற்றும்பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதை அடுத்து நிதி திரட்டுவதற்குத் திருவாளர்கள் த. சிவலிங்கம் ஜே. பி., கே. வி. கனகரத்தினம். ஜே. பி., வழக்கறிஞர் க. பொன்னுத்துரை, செ, மயில்வாகனம், **பிரம்மஸ்ரீ முத்துசாமிக்குருக்கள்** ஆகியோர் கொண்ட உபகுழு நியமிக்கப்பட்டது.

## ரூ.500 அபராதம்

சாவகச்சேரி, செவ்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ராமசாமி வெங்கடாசலம் என்பவர் வடிசாராயம் உத்தரவின்றி வைத்திருந்ததாகக் கிளிநொச்சிப்பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மாஜிஸ்திரேட் 500 ரூபா அபராதம் அல்லது ஒருமாதம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## நள்ளிரவில் நடந்த ..

அனலைதீவு, செவ்

பெண்கள் உள்ள வீட்டில் நள்ளிரவு நேரத்தில் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், படலையைப் பிடுங்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வர் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக்ஸ் முன்னிலையில்விசாரணைக்குஅழைக்கப்பட்டனர்.

அனலைதீவைச் சேர்ந்த க. வேலாயுதம், வே. சின்னராசா. இ. தம்பையா தி. கார்த்திகேசு ஆகிய நால்வரே சம்பந்தப்பட்டவர்களாவர். நேற்றுமுன்தினம் இதுபற்றி விசாரணை நடத்திய காரியாதிகாரி இரு பகுதியினரையு எச்சரித்து விடுவித்தார்.

## "நிறைவுள்ள பல்கலைக்கழகம் வேண்டும்"

கொட்டாஞ்சேனை, செவ்.

"முஸ்லிம் கலை, கலாச்சாரம், மொழி, பண்பு போன்றவற்றை உடைய ஒரு பல்கலைக் கழகத்தை முஸ்லிம்கள் பெற்று, இதில் பட்டம் பெறுவதால் இக் காலத்தில் நாட்டில் என்ன தொழிலை செய்ய முடியும்? இப் பல்கலைக்கழகத்தில் பயனே இல்லை. உண்மையில் பல கலைகளையும் படிக்கக் கூடிய ஒரு நிறைவுள்ள பல்கலைக்கழகம் ஒன்று தான் இப்போது நமக்குத்தேவை. இதனுள் நமது கலை, கலாச்சாரத்தையும் உள்ளடக்கலாம்"

மேற்கண்டவாறு நேற்று முன்தினம்கொழும்பு கன்னரத்தெருவில்நடைபெற்றவாபலிமுன்னணிக்கூட்டத்தில் பேசிய தமிழரசுக் கட்சி உதவி செயலாளர்களில் ஒருவரான ஜனாப் மஸூர் மௌலானா குறிப்பிட்டார்.

## கிணற்றில் விழுந்து மரணம்

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரத்தைச் சேர்ந்த மாரிமுத்து கைம் பெண் இரத்தினம் வயது 53. தனது வீட்டு வளவிலுள்ள கிணற்றில் விழுந்து காலமானர். வலிகாமம் மேற்கு மரணவிசாரணை அதிகாரி கே. சேனுதிராசா விசாரணை-செய்தார். மூளைச் சுகயீனம் காரணமாக கிணற்றில் வீழ்ந்து மரணம் சம்பவித்தது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

# "சிங்கள நாடகங்களின் வெற்றியின் இரகசியம்"

### தமிழ் நாடகங்களின் தரம்உயர அரசாங்க அதிபர் கூறும்யோசனை

யாழ்ப்பாணம், புதன்

"சிங்கள நாடகத் தயாரிப்பாளரான டம்மா ஜகொடாலினதும், அவரது நாடகக் கோஷ்டியினதும் யாழ்ப்பாணத்து வருகை, யாழ்ப்பாணத்து நாடகப் பிரியர்களுக்கும், நாடக மன்றங்களுக்கும், நாடகத் தயாரிப்பாளர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவரது நாடகத்திலுள்ள புதுமைகளை வழிகாட்டியாகக் கொண்டு, யாழ்ப்பாண நாடகத் தயாரிப்பாளர்களும் தங்கள் நாடகங்களைத் தயாரிப்பார்களானல், யாழ்ப்பாணத்து நாடகங்களும் மிகத் தரமானவையாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை."

மேற்கண்டவாறு 1966ம் ஆண்டின் மிகச் சிறந்த நாடகமெனப் பரிசுபெற்ற "வெஸ் முகுனு" நாடகம் நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் மேடை ஏற்றப்பட்டதை முன்னிட்டு வடமாகாண அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்,

இவ்வைபவத்துக்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எம். சபாரத்தினம் தலைமைதாங்கினர். திரு. வேர்ணன் அபயசேகரா தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

"கடந்த காலங்களிலும் பார்க்க தற்போது சிங்கள நாடகங்கள் பலவகையிலும்

[7-ம் பக்கம் பார்க்க]


# யாழ்ப்பாண வாசிகளுக்கு 500 பிளட்டினம் பி. பி. பி. பேனைகள் இலவசம்

6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி.பி.பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

எப்பொழுதும் பாவியுங்கள்

## போர்ஹான்ஸ்

பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின் தனித் தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது.

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லீறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலியபற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்யமாக இருக்கும் வரை நிடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கிய முற்ற ஈறுகளும் வேண்டுமென்ருல், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம் பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

இவ் விலவச அன்பளிப்பு மார்ச் 31ஆம் திகதியோடு முடிவடைகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்மின்ரன்

# சென்.ஜோன்ஸ், கான்வென்ட் சாம்பியன்களாகின

யாழ்ப்பாணம், புதன்
யாழ். மாவட்ட 'பாட்மின்ரன்' விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான பாட்மின்ரன் சுற்றுப் போட்டியில் பெண்களுக்கிடையேயான சுற்றுப் போட்டியில் பரிசுத்த கன்னியாஸ்திரி பாடசாலையும் [கான்வென்ட்], ஆண்கள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் இவ்வருடச் சாம்பியன்களுக்கான வெற்றிக் கேடயங்களைத் தட்டிக் கொண்டன.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் வடபிரதேச வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரெத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசில்களை வழங்கினுர். அவர் பரிசளித்துப் பேசுகையில் சென். ஜோன்ஸ் கோஷ்டியின் பயிற்சியாளரான திரு. அலெக்ஸ் தம்பிராசாவையும், பரிசுத்த கன்னியாஸ்திரி கோஷ்டியின் பயிற்சி ஆசிரியரான திரு. ஆர். பி. நடராசாவையும் இச் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட சங்க காரியதரிசி திரு. ஜே. ஏ. ஜோனையும், விளையாட்டு வீரர், வீராங்கனைகளையும் பாராட்டிப் பேசினுர்.

பெண்கள் போட்டி வேம்படி மகளிர் கோஷ்டிக்கும் கன்னியாஸ்திரி மடம்கோஷ்டிக்கும் இடையே நடைபெற்றது இப்போட்டியில் கன்னியாஸ்திரி மடக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வி பிரான்ஸிஸ்செக ராசசிங்கியின் ஆட்டத்தில் ஒரு தனிபட்ட கவர்ச்சி மிளிர்ந்தது.

தனது ஒற்றை ஆட்டத்திலும், இரட்டையர் ஆட்டத்திலும் மின்னல் வேகத்தில் மட்டையைச் சுழற்றி அபாரமான அடிகளை விளாசித்தள்ளி ரசிகர்களின் பலத்த 'அப்பிளாசை'ப் பெற்ருர்.

வேம்படி மகளிர் கோஷ்டியில் உமையாள் இரத்தின சிங்கத்தின் ஆட்டம் அருமையாக இருந்தது. இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிவசாந்தி சிவராசாவை 11-6, 11-0 புள்ளிகளினுல் வெற்றியீட்டினுர். இப் போட்டி முடிவில் கன்னியாஸ்திரி பாடசாலைக் கோஷ்டி 4—1 புள்ளிகளினுல் வேம்படி மகளிர் கல்லூரியைத் தோற்கடித்தது.

### ஆண்கள் போட்டி

ஆண்கள் போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்றது. இப்போட்டியில் சென். ஜோன்ஸ் 3—2புள்ளிகளால் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டியைத் தோற்கடித்தது. சென்ற வருடம் சாம்பியனுன ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இத்தடவை கடைசி நேரத்தில் கடுமையாக மோதிய சென். ஜோன்ஸ்வீரர்களால் தோற்கடிக்கப்பட்டது. சென். ஜொன்ஸ் காப்டனுன எஸ். ஜேயேந்திரன் அருமையாக ஆடி எதிர்க்கோஷ்டி வீரர் எஸ். நிர்மலானந்தாவை 9—15, 15—6, 15—3 புள்ளிகளால் தோற்கடித்தார். இக்கடும் மோதலுக்கு பலத்த 'அப்பிளாஸ்' கிடைத்தது. நிர்மலானந்தாவின் ஆட்டம் ஆரம்பத்தில் சிறப்பாக இருந்தது.

---

### சிங்கள....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னேறியுள்ளன. இதற்குக் காரணம் மீண்டும் மீண்டும் ஒரே பாணியில் நாடகங்களை எழுதி மேடையேற்ருமல், வெளிநாட்டு நாடகங்களைத் தழுவியும், வேற்றுமொழி நாடகங்களை மொழிபெயர்த்தும், வெளி நாட்டு நாடக நுணுக்கங்களைக் கடைப்பிடித்தும், சிங்கள நாடகங்கள் மேடையேற்றப்படுவதே. இதனைப் பின்பற்றித் தமிழ் நாடகங்களும் தயாரிக்கப்பட்டால் தமிழ் நாடக உலகுக்கும் நல்ல எதிர்காலம் உண்டாகும்.''

ந. நி.

---

கூடைப்பந்தாட்டம்

## சென். ஜோன்ஸ் அமோக வெற்றி

யாழ்ப்பாணம், புதன்
சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் அமோக வெற்றியீட்டியது. ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் சென். யோன்ஸ் வீரர்களின் ஆட்டம் அருமையாகவிருந்தது. எனினும் மத்திய கல்லூரி வீரர்கள் தம்மால் இயன்றமட்டும் கடுமையான போட்டி போட்டார்கள்.

இடைவேளையின் போது சென். ஜோன்ஸ் 6 புள்ளிகளைப் பெற்றது. இடைவேளைக்குப்பின் ஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. சென். ஜோன்ஸ் வீரர்கள் அடுத்தடுத்து கூடையில் பந்தைப் போட்டார்கள். இக்கோஷ்டியின்சிறந்தவீரர்களான டி. ரி. ஞானக்கோன் 10 புள்ளிகளும், ரி. விபுலானந்தமூர்த்தி 6 புள்களும், எஸ். எம். மூத்ததம்பி 4 புள்ளிகளும் பெற்றமைகுறிப்பிடத்தக்கது. மத்தியகல்லூரி 2 புள்ளிகளேபெற்றது. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 22—2 புள்ளிகளால் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டி மத்திய கல்லூரியின் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

---

## 'அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்'

சாவகச்சேரி, செவ்
''மணிவாசகர் அருளிய திருக்கோவையார், சிற்றின்ப நூலாகவும், பேரின்ப நூலாகவும் அவ்வத்திறத்தாராற் போற்றப்படுகின்றது. அறிஞர்களின் ஆழ்ந்த நோக்கில் அது சிற்றின்ப நிகழ்ச்சிகள் மூலம் பேரின்பத்தை உணர்த்துகின்றது. அகப்பொருள் இலக்கணங்களெல்லாம் நிரம்பிய அருந்தமிழ்ப்பாக்களால் ஆக்கப்பட்டது.''

இவ்வாறு நல்லூர் ஆசிரியபயிற்சிக்கலாசாலை இந்து மாமன்றப் பொதுக்கூட்டத்தில் திருக்கோவையார் பற்றிச் சொற்பொழிவாற்றிய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

பண்டிதர் மு. கந்தையா பெரியபுராணச் சிறப்புகள் பற்றி உரைநிகழ்த்துகையில் தமிழர்தம் பெருமை நிறைந்த பண்பாடுகளையும் விருப்பு வெறுப்பற்ற பக்குவத்தை அடையும் மார்க்கத்தையும் எடுத்துக்கூறும் ஒரே இலக்கியம் பெரிய புராணம் என்று குறிப்பிட்டார்.

---

## 160 பேர் பலி

றியோடிஜெனேறே, மார் 21
பிரேஸிலில் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு காரணமாக 160 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

கிரிக்கெட்

## ஸ்கந்தாவிடம் கொழும்பு இந்து தோற்றது

குரும்பசிட்டி, செவ்வாய்
கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குடையில் இரு தினங்கள் நடைபெற்ற சிநேக பூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்கந்தா வீரர்கள் ஒரு இன்னிங்ஸ் 74 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். இப் போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா கல்லூரி சகல விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 193 ஓட்டங்களைக் கைப்பற்றியது. கொழும்புக் கல்லூரி 90 ஓட்டங்களை தமது முதல் இன்திங்ஸில் எடுத்தது.

ஸ்கந்தாவீரர் தமது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடவில்லை. இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்துக் கல்லூரி வீரர் திடீரென சகல விக்கெட்டுகளையும் இழந்து 29 ஓட்டங்களை மட்டும் சைப்பற்றினர்.

---

## நவரத்தினம் கேடயப் போட்டி

நாரந்தனை, செவ்வாய்
தீவுப்பகுதி எம்.பி. திரு. வி. நவரத்தினம் வெற்றிக் கேடயத்துக்கான இரண்டாவது முறையான கரபந்தாட்ட சுற்றுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

தம்பாட்டி சனசமூகநிலைய ''அ'' பிரிவுக்கும் காரைநகர் ''பி'' கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் தம்பாட்டி 9 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

ஊர்காவற்றுறை சனசமூக நிலைய ''அ'' பிரிவுக்கும் புளியங்கூடல் ''பி'' பிரிவு கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் ஊர்காவற்றுறை சனசமூக நிலையம் 1 புள்ளியால் வெற்றி பெற்றது.

நயினுதீவு கணேச கழகம் தம்பாட்டி நிலையத்துடன் மோதியதில் கணேச கழகம் 1 புள்ளியால் வெற்றி பெற்றது.

---

## புதிய நிர்வாகிகள்

உடுவில், செவ்வாய்
''மனிதனின் ஓய்வுநேரத்தை இன்பமுறச்செய்வதற்கு உருவாகிய கலைகள் நாளடைவில் நாட்டின் வளர்ச்சிக்கும், மொழி, மத, இன வளர்ச்சிக்கும் உதவும் வகையில் உருப்பெற்றன. அவற்றைப்பேணி வளர்ப்பது மனிதகுலத்தின் முதல் கடமை.''

கந்தரோடை கல்பனு கலாமன்றத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசியதிரு. சிவா கணேசன் இவ்வாறு கூறினுர். புதிய வருட உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்- திரு. வி. தருமலிங்கம், [உடுவில் எம். பி.] திரு. எஸ். சரவணபவன், திரு. எஸ். பொன்னம்பலம். தலைவர்- திரு. ஆ. தனபாலசிங்கம். உபதலைவர்- திரு. ந. சண்முகநாதன் செயலாளர்- திரு. சிவா கணேசன். உபசெயலாளர்- திரு. சு. பேரின்பநாயகம். தனுதிகாரி- திரு. செ. வைத்தியநாதன், உபதனுதிகாரி- திரு. ஆ. பூலோகநாதன். மூவர் அடங்கிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## திருவிழா

நெடுங்கேணி, திங்கள்
நெடுங்கேணி ஸ்ரீ வேலாயுத சுவாமி கோவில் திருவிழா சென்ற வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. பகல் விசேஷ அபிஷேகமும் பின்னர் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

வடமராட்சி பாடசாலைகளிடையேயான

# சங்கீத, பேச்சுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, செவ்.
வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கல்லூரிகட்கிடையேயான பேச்சு, சங்கீதப்போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. போட்டி முடிவுகள் வருமாறு:-

ஆங்கில பேச்சு - [ஆண்கள் அதி மேற்பிரிவு] பி. சிறிரஞ்சன் - ஹாட்லி கல்லூரி, ஆர். எட்வேர்ட்- ஹாட்லிகல்லூரி, எஸ். சாந்தகுமார், ஹாட்லி கல்லூரி: [மேற்பிரிவு] ரீ. பிரெட்ரிக் நேசராஜா, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ரீ. வசந்தகுமார், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, என். இராஜகுமாரன், ஹாட்லி கல்லூரி; [மத்தியபிரிவு] டி. விஸ்வநாதன், ஹாட்லி கல்லூரி, ரீ. தம்பாபிள்ளை, ஹாட்லி கல்லூரி, பி. சுகந்தன். ஹாட்லி கல்லூரி; [கனிஷ்ட பிரிவு] பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர்கள் சி. ஜே. மனுவேல்பிள்ளை, வீ. ரவிராஜா, ஆர். உருத்திரராசன்; பெண்கள் [மேற்பிரிவு] ஏப்பிரஹாம்உஷா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ். இரஞ்சினி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பீ. சாந்தகுமாரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி; [மத்தியபிரிவு] ரீ. லலிதா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பீ. ஜமுனு, வட இந்து மகளிர் கல்லூரி, பி. அனுசூயா, மெதடிஸ்த மகளிர் கல்லூரி, [கனிஷ்ட பிரிவு] எஸ். வசந்தகுமாரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ். கிருபைமலர், மெதடிஸ்த மகளிர் கல்லூரி, எஸ். சாரதாதேவி, வட இந்து மகளிர் கல்லூரி

தமிழ்ப்பேச்சு—ஆண்கள்- [அதிமேற்பிரிவு] எஸ். நடராசா, வி. பழனிவேல், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி. என். கிருஷ்ணராஜா, ஹாட்லிக்கல்லூரி. [மேற்பிரிவு] த. வசந்தகுமார், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, கே. மனேகரன், வல்வை சிதம்பராக்கல்லூரி ரி. சிவநாதன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, [மத்திய பிரிவு] என். சிவகுமார் ஹாட்லிக்கல்லூரி, கே. குலசேகரம், நெல்லியடி ம. ம. வித்தியாலயம், ஏ. சிவஞானம், ஹாட்லிக் கல்லூரி, [கனிஷ்ட பிரிவு] எஸ். மனேரஞ்சன், ஜே. திருக்குமார் ஹாட்லிக் கல்லூரி, எம். அருட்செல்வன், நெல்லியடி ம. ம. வித்தியாலயம்.

பெண்கள்- [அதிமேற்பிரிவு] கே. புவனேஸ்வரி, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், [மேற்பிரிவு] கே. கமலாதேவி, வட-இந்துமகளிர் கல்லூரி, ஈ. ரஞ்சினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சி. மணிமேகலாதேவி, வட இந்துமகளிர் கல்லூரி, [மத்திய பிரிவு] ஈ. வரதலட்சுமி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி எஸ். பத்மினிதேவி, வட இந்துமகளிர் கல்லூரி, எம். பவானி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி[கனிஷ்டபிரிவு]என். பவானி, வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி, எஸ். சாந்தினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜி. மகாலட்சுமி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

சங்கீதம்—தனிப்பாட்டு: [ஆண்கள் கனிஷ்டபிரிவு] ஆர். ரகுபதி [வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரி], ஏ. சந்திரமோகன் [உடுப்பிட்டி அ. மி. கல்லூரி], ரீ. சின்னத்தம்பி [புலோலி ஆண்கள் ஆங்கில கல்லூரி], [பெண்கள் கனிஷ்டபிரிவு] ஆர். ராதாமணி [பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி], என். ரதி [வல்வெட்டித்துறை சிதம்பரா], கே. புவனேஸ்வரி [வட. இந்துமகளிர்கல்லூரி], [மேற்பிரிவு] எஸ். சந்திரா [நெல்லியடி ம. ம. வித்தியாலயம்], ஆர். ஜீவராஜா [மெதடிஸ்த மகளிர் கல்லூரி].

சங்கீதம் - கூட்டுப்பாடல் பெண்கள் [கனிஷ்ட பிரிவு] பருத்தித்துறை மெதடிஸ்த் மகளிர் கல்லூரி, வட-இந்து மகளிர் கல்லூரி. தொண்டமனுறு இந்துக்கல்லூரி. [மேற்பிரிவு] பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி [முதலிடம்], உடுப்பிட்டி மகளிர் ஆங்கிலக் கல்லூரி, [முதலிடம்] வட இந்துமகளிர் கல்லூரி, ஆண்கள் [கனிஷ்ட பிரிவு] புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை.

---

## விபத்து வழக்கில் ரூ. 500 அபராதம்

சாவகச்சேரி, செவ்.
அக்கராயன் - முருகண்டி வீதியில் மார்ட்டின் சில்வா என்பவர் லொறியைக் கவலையீனமாகச் செலுத்திச் சென்று புகையிரதத்துடன் மோதி என். தாமோதரம் பிள்ளை, கே. கிருசாதுஆகிய இருவருக்கும் மரணம் விளைவித்ததாகக்குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசுவாமி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 500 அபராதம் விதித்தார்.

வழக்காளிதரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் வழக்கை நடாத்திஞர்.

---

மூளாய் ஆஸ்பத்திரி

## உதவியளிப்பதாக மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ்வாய்
மூளாய் கூட்டுறவுஆஸ்பத்திரிக்கு சுகாதாரமந்திரிதிரு எம்.எச். ஜெயவர்த்தனு விஜயம் செய்தபோது, ஆஸ்பத்திரிச் சபைத் தலைவர் முதலியார் பி.எம். சங்கரப்பிள்ளை ஜே. பி. ஆஸ்பத்திரிகளின் தேவைகளை எடுத்துக் கூறினுர். ஆரம்பத்தில் அங்கத்தவர்களுக்கு மட்டுமே சேவை செய்ய ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் இன்று50 ஆயிரம் வெளிநோயாளர்களுக்கும், 500 0வாட்நோயாளர்களுக்கும் சிகிச்சையளித்துவருவதாகவும்அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் வருவதாகத் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதாக சுகாதார மந்திரி வாக்குறுதியளித்தார்.

---

## அதிகாரி கண்டனம்

ஊர்காவற்றுறை, செவ்
''மராமத்து இலாகாவினர் வீதியின்வளைவுகளிலும், பாலங்களிலும் மோட்டார் சாரதிகளை எச்சரிக்கும் அறிகுறிப் பலகைகளைப் போடாமல் விடுவதால் மோட்டார் விபத்துக்கள் ஏற்படுகின்றன.''

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. பி. கதிரவேலு காரைநகர் சிவாலயப் பிரதம குருவான கணபதீஸ்வரக் குருக்களின் மரணவிசாரணையின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மோட்டார் சாரதி சிறிசேனு 1000 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 23ந்திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றதில் ஆஜராவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'நல்லூரில் உப பொலிஸ்நிலையம்'

### உள்நாட்டு மந்திரிக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்கந்தசுவாமிகோவிலுக்கு அருகாமையில் உப பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று நல்லூர் முற்போக்கு வாலிபமுன்னணி ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் உள்நாட்டு மந்திரி டாக்டர் தஹநாயக்காவையும் பொலிஸ் பகுதிஅதிபரையும் கேட்டுள்ளது.

கழகத்தின் கூட்டம் திரு. சு. ஜெகந்நாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

நல்லூர்க்கந்தசாமிகோவிலின் புனிதத்தன்மையைக் கெடுக்கக் கூடியவகையில் இரவுநேரங்களில்சிலகாடையர்களினுல் அசம்பாவிதங்களும், இரவு இராணிகளின் நடமாட்டமும் கோவில் சுற்றுடல்களில் அதிகரித்து வருவதாலும் நல்லூர்ப் பகுதியின் பாதுகாப்பை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் உபபொலிஸ்நிலையமொன்று நிறுவப்படவேண்டும்.

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையின் வளர்ச்சிக்காக பாடசாலையின் பழையமாணவர் சங்கமொன்றை உருவாக்குவது, வருடந்தோறும் சிறப்புடன் நடாத்தப்பட்டுவரும் கலை இலக்கியப் பெருவிழாவை இவ்வருடம் ஏப்பிரலில் சிறப்பாக நடத்துவது.

## மாணவர் விஜயம்

உடுவில், செவ்.

கொழும்பு தொழில் நுட்ப பாடசாலையைச் சேர்ந்த மாணவர் கோஷ்டி ஒன்று இன்று யாழ்ப்பாண கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலைக்கு விஜயம் செய்தது.

---

பிருக், மார்ச் 21

திபெத் தலைநகர் லாஸாவில் இராணுவ நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளதாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### விற்பனைக்கு

ஸ்ருடியோ

யாழ்ப்பாண நகர மத்தியில் சகல படப்பிடிப்புக் கருவிகளையும்கொண்ட ஸ்ருடியோ ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கா. யோகநாதன், 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1650

### வாடகைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்க: இல. 171, கோவில்வீதி, நல்லூர். 2363

## மரண அறிவித்தல்

### எஸ். பொன்னையா

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி பூரணத்தின் அருமைக் கணவரும், செல்வக்குமார், தியாகலிங்கம், ரஞ்சிதமலர், ஜெயக்குமார், ஜெயம் ஆகியவர்களின் தந்தையும், ராசம்மாவின் சகோதரரும், முத்தையா, இராசமணி, யோகம்மா ஆகியோரின் மைத்துனரும், தருமலிங்கம், கனகலிங்கம், மலர் ஆகியோரின் மாமனுருமான திரு. எஸ். பொன்னையா காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு வில்லூண்டி மயானத்தில் நடைபெறும். 2364


# ரூ. 15,000 பரிசு பெறுங்கள்!

"அதி பிரகாச சலவை தரும்"

# சன்லைட்

## போட்டி!

**முதற் பரிசு ரூ. 5,000/- இரண்டாம் பரிசு ரூ. 2,000/-**
**200 ஆறுதற் பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூ. 40/-**



கச்சிதமான சுத்தமான ஆடையணிந்தவர்கள் ஒரு கூட்டத்தின் மத்தியில் எப்போதும் தனிக் கவர்ச்சியுடன் விளங்குவார்கள். "அதி பிரகாச சலவை தரும்" சன்லைட் போட்டியிற் பிரவேசித்து, சன்லைட் வழியில். **தினமும் கச்சிதமாயும் சுத்தமாயும் திகழுங்கள்.**

நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே!

(1) மேற்காணும் படத்தில், சன்லைட்டினுல் அதி பிரகாச சலவை செய்த கச்சித உடையணிந்திருப்பவர்கள் எத்தனை பேரென்று கணக்கிடுங்கள்.

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு கலப்படமான எத்தனை ஆடைகளைச் சலவை செய்யலாம் என்று குறிப்பிடுங்கள். (கவனிக்கவும்: துப்புக் கிடைக்க, சன்லைட் விளம்பரங்களை வாசியுங்கள்)

(3) கீழ்க்காணும் கூப்பனில் உங்கள் விடைகளையும் பெயர் விலாசத்தையும் துப்புரவாக எழுதி, 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட 2 விசேஷ சன்லைட் சோப் உறைகளை இணைத்து தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்புங்கள்.

(4) ஒரு கூப்பனை 4 விண்ணப்பங்கள் வரைக்கும் உபயோகிக்கலாம், ஆனல் ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் 2 விசேஷ சன்லைட் சோப் உறைகள் இணைக்க வேண்டும்.

### விதிகளும் ஒழுங்குகளும்

1. லீவர் பிரதர்ஸ் (சிலோன்) லிமிட்டெட், ஜே. வால்டர் தொம்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் தவிர இலங்கையில் வசிக்கும் அனைவரும் இப் போட்டியிற் பங்குபெறலாம்.
2. நீலக் கட்டத்துக்கு மேல் 3 சிவப்புப் புள்ளிக் குறியிட்ட இரண்டு விசேஷ சன்லைட் உறைகள், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் இணைக்கப்பட வேண்டும்.
3. சகல விண்ணப்பங்களும் சுத்தமாக மையினுல் எழுதப்பட்டு, 31-3-67 அன்றோ, முன்போ, தபாற் பெட்டி எண் 948, கொழும்பு என்ற முகவரிக்குக் கிடைக்கும்படி தபாலில் சேர்க்கப்பட வேண்டும். தெளிவாக எழுதப்படாத, தாமதமான அல்லது காணுமற்போன விண்ணப்பங்களுக்குப் பொறுப்பேற்கப்படமாட்டாது.
4. வந்து சேரும் முதலாவது முற்றும் சரியும் சுத்தமுமான விடைக்கு முதற் பரிசும் அதே போல இரண்டாவது பரிசும் ஒவ்வொன்றும் ரூ. 40/- கொண்ட 200 ஆறுதற் பரிசுகளும் வழங்கப்படும். ஒருவருக்கு ஒரு பரிசுக்கு மேல் வழங்கப்படமாட்டாது.
5. சரியான விடையும் பரிசு பெறுவோர் பட்டியலும் 1967 ஏப்ரல் 17ம் தேதி பத்திரிகைகளில் வெளியிடப்படும்.
6. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. அதுபற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்கப்படமாட்டாது. போட்டியிற் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் விதிகளை முற்றிலும் புரிந்து கொண்டு அவற்றுக்குக் கட்டுப்படச் சம்மதித்தவராகக் கருதப்படுவர்.

முடிவு தேதி 1967 மார்ச் 31

(1) சன்லைட்டினுல் அதி பிரகாச சலவை செய்த கச்சித உடையணிந்திருப்போர் தொகை:

(2) ஒரு கட்டி சன்லைட் சோப் கொண்டு சலவை செய்யக்கூடிய கலப்படமான ஆடைகளின் தொகை:

பெயர்: ..............................

விலாசம்: ..............................

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | | |
| | | | |




**சன்லைட் அதி பிரகாசமாகச் சலவை செய்கிறது-**
**வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்!**

ஒரு லீவர் உற்பத்தி

S/4 X.8LP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் பதிப்பகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 3-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டுமார்ச்மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.